

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.4.2025) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.4.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் . சிவ.வீ. மெய்யநாதன் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.4.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான முன்னாள் படைவீரர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### ரூ.70.69 கோடி மதிப்பில் – முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து

# கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்!

## பெரியார் அரசு மருத்துவமனைக்கு மூன்று வாகனங்களையும் தொடங்கி வைத்தார்!

**சென்னை,மே. 1–**

**கொளத்தூர் தொகுதியில் மொத்தம் ரூ.70.69 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மூன்று வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.4.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொளத்தூர், ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் 23 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 130 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். மேலும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 40 கோடியே 34 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,

6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலான முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, பெரியார் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக 40 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மூன்று வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஜமாலியா லேன் திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகள் வழங்குதல்**

கொளத்தூரில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் 23 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 130 அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, குடியிருப்புகளை பார்வையிட்டார். மேலும், பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளையும், அவர்களுக்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்கினார்.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய 128 அடுக்குமாடி குடியிருப்புகள் இடிக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களால் 11.6.2022 அன்று ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டி,

128 குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.24,000 வீதம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் வழங்கினார். இத்திட்டப்பகுதியில் தரை மற்றும் 5 தளங்களுடன் இரண்டு தொகுப்புகளாக 130 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் 23.04 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களுடன் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடியிருப்பும் 413 சதுர அடி கட்டுமான பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, குளியலறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதியில் பழைய குடியிருப்புகளில் வாழ்ந்த 128 குடும்பங்களுக்கும், கூடுதலாக கட்டப்பட்டுள்ள 2 குடியிருப்புகள் சென்னை மாநகரில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு குடியிருப்பின் மதிப்பு 17.72 இலட்சம் ரூபாயாகும்.

இத்திட்டப்பகுதியில் மழை நீர் கால்வாய்கள், கான்கீரிட் சாலைகள், தெரு விளக்குகள், மின்சார வசதி, கழிவு நீர்தேக்க தொட்டி, மின் தூக்கி, மின்னாக்கி, குடிநீர் வசதி, அங்கன்வாடி போன்ற வசதிகள் மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கபட்டுள்ளது. மேலும், குடியிருப்போர் நலச்சங்கள் அமைக்கப்பட்டு குடியிருப்புகளை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

**கொளத்தூர், பந்தர் கார்டன் சென்னை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் விவரங்கள்**

கொளத்தூர் தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மூலதன நிதியின் கீழ் 8 கோடியே 96 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள், பெயர்ப்பலகை பழுதுபார்க்கும் பணிகள், மழைநீருடன் வரப்பெறும் உபரி மண்ணை சேகரிக்கும் தொட்டிகள், வேகத் தடைகள் அமைக்கும் பணி, தியான மேடை மற்றும் பூங்கா வெளிப்புற நடைபாதை, விளையாட்டு மைதானங்களில் பாதுகாப்பு கேமரா பொருத்தும் பணிகள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் சுற்றுச்சுவர், மழைநீரை அகற்ற குழாய் பதித்து மழைநீர் வடிகாலுடன் இணைக்கும் பணிகள், தகன மேடை மற்றும் புகைவெளியேற்றி ஆகியவற்றை பழுது பார்த்து மேம்படுத்தும் பணிகள், பல்நோக்கு மையங்கள், உயர்நிலைப் பள்ளி விளையாட்டு திடல் மேம்படுத்தும் பணிகள், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் மேற்கூரையுடன் கூடிய நுழைவு வாயில் கட்டும் பணி, கிரிக்கெட் பயிற்சிக்கூடம், சாலையோர பூங்காக்கள் அமைக்கும் பணிகள், புதிய உணவருந்தும் கூடம் கட்டும் பணிகள், பேருந்து நிழற்குடை பழுதுபார்க்கும் பணிகள், மாநகராட்சி பூங்காவில் நடைபாதை அமைக்கும் பணிகள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் பணிகள், மாநகராட்சி வார்டு அலுவலகத்தில் கூடுதல் அலுவலக அறைகள் கட்டும் பணிகள், விளையாட்டு மைதானத்தில் செயற்கை நீருற்று அமைக்கும் பணிகள் உள்ளிட்ட 63 பணிகள்;

திரு.வி.க. நகர் மண்டலத்தில் 3 கோடியே 75 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 40 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களை மேம்படுத்தும் பணிகள் மற்றும் 2 புதிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் கட்டும் பணிகள்;

கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 64 முதல் 70 வரை உள்ள வார்டுகளில் 196 மின்மாற்றிகளுக்கு 7 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக மின்மாற்றி சுவர் (View Cutter) அமைக்கும் பணிகள்;

திரு.வி.க. நகர் மண்டலம், ராஜா தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பிற்கு அருகில்

70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்டும் பணிகள்;

**என மொத்தம் 21 கோடியே 65 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

கொளத்தூர், சிவானந்தா நகர் பகுதியில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய நவீன IOT மூலம் செயல்படுத்தக்கூடிய 5 எம்.எல்.டி. திறன் கொண்ட தானியங்கி கழிவுநீர் உந்து நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**பேப்பர் மில்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் விவரங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், வி.க. மண்டலம், பேப்பர் மில்ஸ் சாலையில் 4 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி, 9 கோடியே 67 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மற்றும் சோமையா தெருவில் 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி, என மொத்தம் 18 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெரியார் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்குதல்**

கொளத்தூர், பெரியார் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக கரூர் வைஸ்யா வங்கியின் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து 40 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உயிர் காக்கும் கருவிகள் பொருத்திய அதிநவீன அவசர ஊர்தி (ACLS Ambulance) மற்றும் பேட்டரியால் இயங்கும் 2 வாகனங்களின் சேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**ஜி.கே.எம். காலனியில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள முதல்வர் கல்விச் சோலையை திறந்து வைத்தல்**

கொளத்தூர், ஜி.கே.எம். காலனி 12–வது தெருவில் அமைந்துள்ள சென்னை தொடக்கப் பள்ளியின் 2–வது தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் டிஜிட்டல் பலகை, மேஜைகள், நாற்காலிகள், குளிர்சாதன வசதியுடன் கூடிய ஒரு வகுப்பறை, மூன்று வகுப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாலை நேர சிறப்பு வகுப்பு மையமான “முதல்வர் கல்விச் சோலை”–யை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். மேலும், முதல்வர் கல்விச் சோலை மையத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

முன்னதாக, கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், கொளத்தூர் தொகுதியைச் சேர்ந்த 189 பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை, மாவு அரவை இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள், மூன்று சக்கர சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, , தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, , பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், , தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜய கார்த்திகேயன், , நகர் ஊரமைப்பு இயக்குநர்

பா.கணேசன், , பெரியார் அரசு மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் டாக்டர் ஹேமலதா, கரூர் வைஸ்யா வங்கியின் பொது மேலாளர் எஸ்.டி. கோபால், மண்டல தலைமை அலுவலர் பி. ஜனார்தனன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை வேந்தரை நியமிக்கவும் – பதவி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில்

# தமிழ்நாடு உடற்கல்வியியல் - விளையாட்டுப் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம்!

## சட்டப்பேரவையில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல்! ஒருமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, மே. 1–**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தரை நியமிக்கவும், பணி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் அளிக்க வகை செய்யும் - “2025-ஆம் ஆண்டு, தமிழ்நாடு உடற் கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் திருத்தச் சட்ட முன்வடிவினைத் தாக்கல் செய்தார்.**

**இச்சட்ட முன்வடிவு, பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

இச்சட்ட முன்வடிவின் நோக்கக் காரண விளக்கவுரை வருமாறு:–

முதலமைச்சர் அவர்களால் நவம்பர் 18, 2023 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட, குறித்த சில பல்கலைக்கழகச் சட்டங்களை திருத்தம் செய்வதற்கான புத்து சட்டமுன்வடிவுகளானது, பாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், நீதிப்பேராணை மறு (உரிமையியல் எண். 1239/2023 “தமிழ்நாடு அரசு - எதிர் - தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்” எனும் வழக்கில் இந்திய அரசமைப்பின் 142–ஆம் உறுப்பின்படி பிறப்பித்த ஏப்ரல் 8, 2025 தேதியிட்ட தீர்ப்புரையைப் பின்பற்றி, ஆளுநரின் ஒப்புதலை நவம்பர் 18, 2023 தேதியன்றே பெற்றுவிட்டதாகக் கருதப்



படுகிறது. கூறப்பட்ட மாநில பல்கலைக்கழகச் சட்டங்கள், 18 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தரை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தரை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், மாற்றுத்திறன் அடிப்படையிலான பாகுபாட்டை தடைசெய்கிற, 2016–ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டத்தின் (மையச் சட்டம் 49/2016) 3–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு இணங்க, பல்கலைக்கழகங்களின் அதிகார அமைப்புகள் எதிலும் உறுப்பினராக தேர்வு செய்யப்படுவதற்கு, நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்வதற்கு காது கேளாதவாய் பேசமுடியாத நபரின் தகுதியின்மையை நீக்கம் செய்வதற்கு சில பல்கலைக்கழகச் சட்டங்கள் ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

எனவே, மேற்சொன்ன பல்கலைக்கழக அதிகாரஅமைப்பின் உறுப்பினராக இருப்பதற்கான மேற்சொன்ன தகுதியின்மையை நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது.

மேலும், பிற மாநிலங்களில் உள்ளதைப் போன்று, இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிலும் நிதித்துறைச் செயலாளரை ஓர் உறுப்பினராக கொண்டிருப்பது அவசியமாகிறது. எனவே, மேற்கூறிய பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவில், நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளரையும் ஒரு பதவி வழி உறுப்பினராக சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. எனவே, 2004–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 9/2005) மேற்சொன்ன நோக்கங்களுக்காக, தகுந்தவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இவ்வாறு அச்சட்ட முன்வடிவின் நோக்க காரணமாக விளக்கவுரை தரப்பட்டுள்ளது.

### பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின்

# வலுக்கட்டாய நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான சட்டம்!

## விவாதத்திற்கு – துணை முதல்வர் பதிலுரை! சட்ட முன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றம்!

**சென்னை, மே. 1–**

**பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாத்திடும் வகையில், சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சட்ட முன்வடிவு, நேற்று முன்தினம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

அதன் விவரம் வருமாறு:–

சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்திடும் சட்ட முன்வடிவினை கடந்த 26–ஆம் தேதி அன்று தாக்கல் செய்தார்.

இச் சட்ட முன்வடிவின், “நோக்கக் காரண விளக்கவுரை”யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பணக்கடன் வழங்குபவர்கள் மற்றும் அடகுக் கடைக்காரர்களின் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தி, கடனின் மீதான கடும் வட்டியிலிருந்து மக்களைக் காப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. 1943–ஆம் பணக்கடன் வழங்குபவர்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XXVI/1957) மற்றும் 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு கந்துவட்டி விதித்தல் தடைச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/2003) ஆகியவற்றை அரசு இயற்றியுள்ளது.

எனினும், சமீப காலமாக, சமூகத்தின் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினர் குறிப்பாக விவசாயிகள், மகளிர், சுய உதவிக் குழுக்கள், விவசாய கூலித்தொழிலாளர்கள், பணியாளர்கள், நடைபாதை வியாபாரிகள், பால் பண்ணைத் தொழிலாளர்கள், கட்டிடப் பணியாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோர் எண்ம முறையில் வழங்கல் தளங்கள் உள்ளடங்கலாக பணக்கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் கவர்ச்சிகரமான கடன்களுக்கு அடிக்கடி இரையாகி, தாங்க இயலாத கடன் சுமைக்கு ஆட்படுகின்றனர்.

மேலும், பணக்கடன் வழங்கும் நிறுவனங்கள், ஏற்கனவே நிதிச் சுமையில் இருக்கும் கடன் பெற்றவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதற்கு முறையற்ற வழியை நாடுகின்றனர்;

அது, துயரத்தில் இருக்கும் கடன் பெற்றவர்களை சில சமயங்களில் தற்கொலை செய்துகொள்வதற்கு தூண்டுதலாய் அமைந்து, அதன் மூலம் பலரின் குடும்பங்களை அழித்து சமூக ஒழுங்கை பாதிப்படையச் செய்கிறது.

எனவே, தனிநபர் அல்லது தனிநபர்கள் குழு, சுயஉதவிக் குழுக்கள் அல்லது கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின், வலுக்கட்டாய வசூலிப்பு முறையால் ஏற்படும் மிகுந்த இன்னல்களிலிருந்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்க ஒரு சட்ட வரையறைக்கு வகைசெய்வது அவசியமென கருதப்படுகிறது.

அதற்கிணங்க பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இவ்வாறு, அச்சட்ட முன்வடிவில் நோக்கக் காரண விளக்கவுரையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சட்டப்பேரவையில் இச்சட்ட முன்வடிவு மீது நேற்று விவாதம் நடைபெற்றது.

அவ்விவாதத்திற்குப் பதிலளித்து துணை முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:–

தனி நபர் அல்லது தனி நபர்கள் குழு, சுய உதவிக் குழுக்கள் அல்லது கூட்டுப் பொறுப்பு குழுக்கள் ஆகியவற்றிற்கு கடன் வழங்குகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள பண கடன் வழங்குகின்ற நிறுவனங்களினுடைய வலுக்கட்டாய வசூலிப்பு முறையால் ஏற்படும் மிகுந்த இன்னல்களிலிருந்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாக்க இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, உறுப்பினர் தி.வேல்முருகன், உறுப்பினர் மா. சின்னதுரை, உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன், ஜி.கே. மணி, செல்வபெருந்தகை ஆகியோர் இந்த சட்ட முன்வடிவைப் பாராட்டியிருக்கிறார்கள். பல்வேறு கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். உறுப்பினர்களின் கருத்துகள் வருங்காலங்களில் கண்டிப்பாக ஆய்வு செய்யப்படும்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.